

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் கோமதி அம்பாள் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி திடீர் ஆய்வு பணி மேற்கொண்டார்.அப்போது பிளஸ் 2 படிக்கும் பள்ளி மாணவன் முகைதீன்யாஷரிடம் பாடத்தை படிக்கச் சொல்லி கேட்டறிந்தார்.மாணவன் படித்ததை கேட்டதும் அவரை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி தட்டிக் கொடுத்தார்.அதனைத் தொடர்ந்து அங்கு சதுரங்கப் போட்டிகள் நடைபெறுவதை பார்வையிட்டார்.உடன் தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. உள்ளார்.

### ஒன்றிய அரசு மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடந்து கொள்கிறது!

# தமிழ்நாட்டின் திட்டங்களுக்கு போதிய நிதி ஒதுக்க வேண்டும்!

## மாநிலங்களவையில் இரா.கிரிராஜன் வலியுறுத்தல்!

புதுடெல்லி, ஆக. 7 - சென்னை மெட்ரோ ரயில் (II) மற்றும் நகர்ப்புற மேம்பாட்டு திட்டங்களுக்கு தேவைப்படும் நிதி ஒதுக்க வேண்டும் என்று மாநிலங்களவையில் நகர்ப்புற மேம்பாடு மற்றும் வீட்டுவசதி நிதி ஒதுக்கீடு பணிகள் மசோதாவில் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. கிரிராஜன் கோரிக்கை விடுத்தார்.

அவர் பேசியது வருமாறு:

தலைவர் அவர்களே, இந்த ஆண்டிற்கான பட்ஜெட் 202425ல் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகத்திற்கான பட்ஜெட் ஒதுக்கீடு, வருவாய் செலவு ரூ.53,948.31 கோடி, மூலதன செலவு ரூ.28,628.26 மற்றும் மொத்த ஒதுக்கீடு ரூ.82,576.57. அதில் நாடு முழுவதற்க்கும் MRTS மற்றும் மெட்ரோ திட்டங்களுக்கு ரூ. 24,931.98 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால் ஒன்றிய அரசு தமிழ்நாட்டை இந்தியாவின் மாநிலங்களில் ஒன்றாகக் கருதவில்லை. தமிழக மக்களின் நலன்களை ஒன்றிய அரசு புறக்கணிக்கிறது. இது அரசியலமைப்புச் சட்டத்துக்கு விரோதமானது, ஜனநாயகத்துக்கு எதிரானது. ரூ. 63,246 கோடி மதிப்பிலான சென்னை மெட்ரோ ரயில் இரண்டாம் கட்டத் திட்டம் தற்போது நடைபெற்று வருகிறது. இந்தத் திட்டத்தைத் தொடர, தமிழக அரசுக்கு இந்திய அரசு அனுமதி அளித்துள்ளது. அன்றிலிருந்து ஒன்றிய அரசு தங்களின் பங்கு நிதியை விடுவிக்கும் என எதிர்பார்த்து தமிழக அரசு இத்திட்டத்திற்கு நிதி அளித்து வருகிறது. இதுவரை, தமிழக அரசு, 30,000 கோடி ரூபாய்க்கு மேல் செலவிட்டுள்ளது.

வாக்குறுதி அளித்தபடி ஒன்றிய அரசிடம் இருந்து எந்த நிதியும் வராத நிலையில் தமிழக அரசு இத்திட்டத்தை நிறைவேற்றி வருகிறது. இதனால் தமிழக அரசுக்கு இன்று வரை கடும் நிதிச்சுமை ஏற்பட்டுள்ளது. ஒன்றிய அரசு மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடந்து கொள்வது உண்மையில் நியாயப்படுத்த முடியாதது மற்றும் தமிழக மக்களுக்கு இழைக்கப்பட்ட மாபெரும் அநீதியாகும்.

சென்னை மெட்ரோ ரயில் இரண்டாம் கட்டத் திட்டம், 118.9 கி.மீ நீளத்திற்கு மூன்று வழித்தடங்களை உருவாக்க திட்டமிடப்பட்ட ஒரு மிக முக்கியமான உள்கட்டமைப்பு திட்டமாகும், இது போக்குவரத்தை எளிதாக்கும் வகையில் சென்னையின் நீளம் மற்றும் அகலத்தில் 128 ரயில் நிலையங்களை உள்ளடக்கியதாகும்.

ஒன்றிய அரசு தங்களின் பங்கு நிதியை வழங்காத நிலையில், தமிழக அரசின் முயற்சியால் திட்டம் இலக்கை எட்டியுள்ளது. ஆனால், ஒன்றிய அரசு பங்கு நிதி மற்றும் இருதரப்பு/பல்தரப்பு ஏஜென்சிகளின் கடன் உதவியை சரியான நேரத்தில் வெளியிடுவதில் தொடர்ந்து காலதாமதமானால், அது திட்டத்திற்க்கு தடையை ஏற்படுத்தக்கூடும். 63,246 கோடியில் அறிவிக்கப்பட்ட மிக முக்கியமான ஒன்றிய அரசின் திட்டமான சென்னை மெட்ரோ ரெயில் 2ம் கட்ட திட்டத்துக்கு தங்களின் பங்கு நிதியை வழங்காமல் ஒன்றிய அரசு வேண்டுமென்றே காலதாமதம் செய்கிறது என்ற அச்சம் தமிழக மக்கள் மனதில் உள்ளது.

பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் 14 பிப்ரவரி 2021 அன்று சென்னையில் ஆற்றிய உரையில், சென்னை மெட்ரோ ரயில் இரண்டாம் கட்டத் திட்டத்திற்கு ரூ.63,000 கோடியை தனது அரசு அனுமதித்துள்ளது என்று திட்டவட்டமாகத் தெரிவித்திருந்தார். அதை நிதி அமைச்சர் மறுக்க முடியுமா?

இந்த திட்டத்திற்கான அடிக்கல்லை உள்துறை அமைச்சர் அமித் ஷா நாட்டினார். அதை நிதி அமைச்சர் மறுக்க முடியுமா?

பிறகு ஏன் ஒன்றிய அரசு 2024 பட்ஜெட்டில் சென்னை மெட்ரோ ரயில் இரண்டாம் கட்ட திட்டத்தை நிறைவேற்ற ஒரு ரூபாய் கூட விடுவிக்கவில்லை. இதற்கு தமிழக மக்கள் நிதியமைச்சரிடம் இருந்து சரியான பதிலை எதிர்ப்பார்க்கிறார்கள்.

கோயம்புத்தூர் மற்றும் மதுரையில் மெட்ரோ ரயில் திட்டத்தைத் தொடங்க வேண்டும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் ஒன்றிய அரசை கேட்டுக் கொண்டார். ஆனால் ஒன்றிய அரசு இது குறித்து மவுனம் காக்கிறது. தமிழகத்திலிருந்து அதிகபட்ச ஜிஎஸ்டி மற்றும் பிற வரிகளை வசூலிப்பதில் மட்டும் ஆர்வம் காட்டும் ஒன்றிய அரசு தமிழக மக்களின் தேவைகளை நிறைவு செய்ய தேவைப்படும் நிதியினை ஒதுக்குவதில்லை.

இந்தச் சூழ்நிலையில், சென்னை மெட்ரோ ரயில் திட்ட இரண்டாம் கட்டப் பணிகள் சுமூகமாக நடைபெறுவதற்கு, ஒன்றிய அரசு தங்களின் பங்கு நிதியை உடனடியாக வழங்க வேண்டும் என்றும், JICA மற்றும் ADB நிறுவனங்களிடமிருந்து கடன் உதவியை விரைவாக வழங்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.



ஒன்றிய அரசு வழங்கும் திட்டங்களின் கீழ், பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா, (PMAY) நகர்ப்புற திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட மொத்தத் தொகை ரூ.30,170 கோடி. இதில் மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களுக்கான ஒதுக்கப்பட்ட தொகை ரூ.23,712 கோடி. பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினர் (EWS) மற்றும் குறைந்த வருமானம் கொண்ட பிரிவினருக்கு (LIG) கடனுடன் இணைக்கப்பட்ட மானியத் திட்டம்1 (CLSS1) ரூ.3000 கோடியாக உள்ளது. MIG க்கு ரூ.1000 கோடி. இந்த தொகையை வைத்துக்கொண்டு, 2047ல் அனைவருக்கும் வீடு என்ற திட்டத்தை எட்ட முடியாது. ஒன்றிய அரசு இத்திட்டங்களுக்கு அதிக நிதி ஒதுக்க வேண்டும்.

"நகர்ப்புற புத்துயிர் இயக்கம்" (AMRUT) மற்றும் "ஸ்மார்ட் சிட்டிஸ் மிஷன்" ஆகியவற்றிற்கு அரசாங்கம் ரூ.10,400 கோடிகளை ஒதுக்கீடு செய்துள்ளது. இது போதுமானதாக இல்லை மற்றும் மக்களின் தேவைகளை பூர்த்தி செய்ய முடியாது. தேசிய நகர்ப்புற டிஜிட்டல் பணிக்கு (NUDM) வெறும் ரூ.1150 கோடி மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது. பரந்த நகர்புற பகுதிகளை மேம்படுத்த இது முற்றிலும் போதாது.

"ஸ்வச் பாரத் மிஷன்" (SBM) கீழ் - நகர்ப்புறத்திற்கு ரூ.5000 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது இது போதுமானதாக இல்லை.

தமிழ்நாட்டில் நகர்ப்புறக் குடிசைப் பகுதிகளின் மோசமான வாழ்க்கைச் சூழலை ஒரு காலக்கெடுவுக்குள் சீர்செய்து, அவர்களுக்கு மலிவு விலையில் வீடுகள் வழங்கவும், வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும், தமிழ்நாடு குடி சைப் பகுதி மாற்றும் வாரிய (TNSCB)த்தை முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களால் 54 ஆண்டுகளுக்கு முன்பு 1970 ல் உருவாக்கினார்.

நகர்ப்புற குடிசைப் பகுதிகளை மேம்படுத்துவதும், அவற்றை வாழக்கூடிய பகுதிகளாக மாற்றுவதும் இந்த அமைப்பின் முதன்மைப் பணியாக இருப்பதால், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க. ஸ்டாலின்அவர்கள் 01.09.2021 முதல் அமலுக்கு வரும் வகையில் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் பெயரை "தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் (TNUHDB)" என பெயர் மாற்றம் செய்யதுள்ளார்

தற்போது, தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகையில் கிட்டத்தட்ட 50% பேர் நகர்ப்புறங்களில் வாழ்கின்றனர். இந்த நிலை தொடர்ந்து நீடிக்கும் போது, 2030 ஆம் ஆண்டில், தமிழ்நாடு அதன் மொத்த மக்கள்தொகையில் கிட்டத்தட்ட 67% மக்கள் நகர்ப்புறங்களில் வசிக்கும் இந்தியாவில் மிகவும் நகர மயமாக்கப்பட்ட மாநிலமாக மாறும்.

தமிழ்நாட்டில் நகர்ப்புறங்களில் உள்ள நிலத்தின் வழிகாட்டி மதிப்பு அதிகமாக இருப்பதால், பிரதமர் வீடுகட்டும் (PMAY) நகர்ப்புற திட்டத்தின் கீழ் வீடுகள் கட்ட தமிழக அரசு வழங்கிய நிலத்திற்கு ஆகும் செலவே அதிகமான செலவாகும். ஆனால் தமிழக அரசு ஒரு வீட்டிற்கு ரூ.7.5 முதல் 13 லட்சம் வரை செலவழித்து வருவதால், ஒன்றிய அரசு ஒரு வீட்டிற்கு ரூ.1.5 லட்சம் மட்டுமே வழங்குகிறது. முதலமைச்சர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்கள் பிரதமர் வீடுகட்டும் (PMAY) நகர்ப்புற திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டுவதற்கான நிதியை அதிகரிக்க ஒன்றிய அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளார். ஆனால் இந்த திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டுவதற்கான நிதியை ஒன்றிய அரசு தனது பங்கை அதிகரிக்கவில்லை.

உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற பலதரப்பு நிதி நிறுவனங்கள் வீட்டுவசதி துறையை மேம்படுத்த நிதி உதவி வழங்குகின்றன. உலக வங்கி நிதி உதவியாக ரூ.3,038.30 கோடி (USD 390 மில்லியன்) தமிழக அரசுக்கு மலிவு விலை நகர்ப்புற வீட்டுத் திட்டங்களில் தனியார் துறை பங்கேற்பை செயல்படுத்தும் கொள்கை சீர்திருத்தங்கள் மூலம் வீட்டு வசதித் துறையை வலுப்படுத்த வேண்டும்.

"தமிழ்நாடு உள்கட்டமைப்பு மற்றும் நிதி மேலாண்மை கழகம் லிமிடெட்" குறைந்த வருமானம் மற்றும் புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு தொழில்துறை வீடுகள் மற்றும் பணிபுரியும் பெண்கள் தங்கும் விடுதிகள் மற்றும் தமிழ்நாடு தங்குமிடம் நிதியின் கீழ் பணிபுரியும் பெண்களுக்கு PPP முறையில் 500 படுக்கைகள் மற்றும் தொழில்துறை தொழிலாளர்களுக்கு 5000 படுக்கைகளை உருவாக்குகிறது.

தமிழ்நாடு அரசின் நிதியுதவியின் கீழ் "அயோத்தி தாசபண்டிதர்" குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம், சாலைகள், ஆழ்துளை கிணறுகள், மழைநீர் வடிகால், குடியிருப்புகளைச் சுற்றி பேவர் பிளாக்குகள், குடிநீர் இணைப்புகள், குடிசைத் தடுப்புகளை புதுப்பித்தல், வசதியான உள்கட்டமைப்பு மேம்பாடுகளை செயல்படுத்தி வருகிறது. சென்னை மற்றும் பிற நகரங்களில் 12,465 குடியிருப்புகளை உள்ளடக்கிய 32 குடியிருப்பு திட்டங்களில் ரூ.50.00 கோடி செலவில் கடைகள், சாக்கடைகளை மேம்படுத்துதல் போன்ற பணிகள் நடைபெறுகிறது.

சென்னை நகரத்தின் சமச்சீர் மற்றும் சமமான வளர்ச்சியை உறுதி செய்வதற்காக, ஒரு புதிய "வட சென்னை வளர்ச்சித் திட்டம்" என்ற பெயரில் ரூ.4,000 கோடி செலவில் அடுத்த மூன்று ஆண்டுகளில் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், உள்கட்டமைப்பு பற்றாக்குறை, மற்றும் வளர்ச்சியில் உள்ள இடைவெளிகளை கண்டறிந்து, இடைவெளிகளை பூர்த்தி செய்ய திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளது. மேலும், 202426 கால கட்டத்தில் வடசென்னையில் 1,336 பாழடைந்த குடியிருப்புகளை ரூ.215.00 கோடி செலவில் புனரமைக்க TNUHDB முன்மொழிந்தது.

சென்னை நகர நீர்வழிப் பாதைகளை மீட்டமைத்தல் ஆற்றங்கரையோரம் வசிக்கும் குடும்பங்களுக்கு குடியிருப்புகள் வழங்குதல் - அடையாறு மற்றும் கூவம் ஆற்றங்கரையில் வசிக்கும் குடும்பங்கள் நீர் வளத் துறையால் கண்டறியப்பட்டு, நீர் தேவையின் அடிப்படையில் TNUHDB யால் கட்டப்பட்ட குடியிருப்புகளில் குடியமர்த்த ப்படுகின்றனர். சென்னை நகர நீர்வழிப் பாதைகளின் சுற்றுச்சூழல் மறுசீரமைப்பின் ஒரு பகுதியாக, பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் பிற துறைகளுடன் ஒருங்கிணைந்து, நீர் வளத்துறை. கூவம் நதிகள் சீரமைப்புத் திட்டம், அடையாறு நதிகள் சீரமைப்புத் திட்டம், உள்ளிட்ட தமிழகத்தின் ஆறுகள் மற்றும் நீர்நிலைகளை சீரமைக்க ஒன்றிய அரசு கூடுதல் நிதி ஒதுக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்.

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம், தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகம் ஆகியவற்றின் ஒருங்கிணைப்புடன் பல்வேறு தொழில்களில் உற்பத்தி திறன் பயிற்சி அளிக்கப்படுகிறது.

குடிசைப் பகுதி இல்லாத தமிழகத்தை அடைய, 2030ஆம் ஆண்டுக்குள் எஞ்சியுள்ள அனைத்து குடிசைக் குடும்பங்களுக்கும் வீடு மற்றும் உள்கட்டமைப்பு வசதிகள் செய்து தரப்படும், வாழ்வாதார நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டு, அவர்களின் வாழ்க்கைத் தரம் உயர்த்தப்பட்டு, திராவிட மாடல் அரசின் கனவை நனவாக்கும். "ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணலாம்" (God we shall see in the smile of poor)

இவ்வாறு இரா.கிரிராஜன் பேசினார்.



நெல்லை மாநகர தி.மு.க. சார்பில் கலைஞர் அவர்களின் 101 வது பிறந்தநாள் விழா தொடர் 101 நிகழ்வாக நடைபெற்றது.அதன்படி மாநகர நெசவாளர் அணி தலைவர் லட்சுமணன் ஏற்பாட்டில் டவுண் குறுக்குத்துறை ஆதரவற்றோர் முதியோர் இல்லத்தில் இரவு உணவு வழங்கும் நிகழ்வு நெல்லை பகுதி செயலாளர் நமச்சிவாயம் தலைமையில் மாநகர துணை செயலாளர் அப்துல் கையூம் பாளை பகுதி செயலாளர் அன்டன் செல்லதுரை ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இந்நிலையில் மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் பங்கேற்று உணவு வழங்கினார். நிகழ்வில் அலிஃப் மீரான், ஸ்டார் முருகன், கேபிள் குமரேசன், பத்மா சௌந்தரம், சிவா, பத்மா, சௌந்தரம், மேரி, பிந்து, ஆனி, ராஜேஸ்வரி, நர்மதா, ஷெட்டி, மகாராஜன், சுப்ரித் சுப்பிரமணியன், மில் ஜே.குமார், அந்தோணி ராஜ், வினோத், கார்த்திக், சாலமோன், சிரிப்பு சேக், ஹமீம் முஸ்தபா, சங்கர் உள்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.

## ஈங்கிவன் போல் இனி வையத்தில் யார் தான் உண்டு?



நெஞ்சிலே வீரம் தேக்கி,
நினைவெலாம் வைரம் ஆக்கி,
பிஞ்சிலே கழகந் தூக்கி,
பிழையிலா வாழ்வை நோற்று,
வஞ்சக உலகம் வீழ,
வரலாற்றில் பெயர்செ துக்கி,
பஞ்சுநூல் பூட்டி வைத்த,
பருத்திபோல் ஆடை ஆனோன்.!

வெஞ்சமர்க் களத்தில் வென்று
வெற்றிகள் பலகு வித்தோன்;
தஞ்சைமண் பிறப்பெ டுத்துத்;
தரணித்தோள் போற்ற நின்றோன்;
விஞ்சிடும் வினைகள் செய்தே ,
விண்முட்ட சாத னைகள்,
கொஞ்சிடக் களித்தோன்; கண்டோன்:
குலமது தழைக்க வாழ்ந்தோன்!

அஞ்சிடா பெரியார், அண்ணா;
அவர்தந்த தன்மா னத்தை;
நெஞ்சிலே கலைஞர் வைத்தான்;
நிலம்தோறும் மாந்தர் மீட்டான்;
நஞ்சினை வார்த்தோர் வீழ,
நலமது தழைக்க நின்ற,
விஞ்சிடும் அன்னோ னன்றி,
வேறுயார் தமிழ்மண் ணில்சொல்?

தாழ்ந்தவர் , தீண்டா மண்ணில் !
தாரணி யெங்கும் மாண்டு
வீழ்ந்துதாம் அழிந்தா ரிங்கே !
விடியலை எண்ணி எண்ணி
வாழ்ந்திட எல்லை யின்றி
வையத்தில் ஓடி நைந்தார் !
பாழ்பட்டார் பாடு பட்டோர்!
படுகுழி வீழ்ந்தே செத்தார்!

ஆதர வற்றோர் அன்ன
அனைவர்க்கும் மீட்போ னாகி
ஆதவன் போலே இங்கு
ஆரூரார் வந்து காத்தார்!

போதகர் பெரியார், அண்ணா
போற்றினர் ! புவனம் காத்தே ,
மேதகு அறிவின் மேன்மை
மேதினி வாழ்த்தக் கண்டார் !

ஈங்கிவன் போல நாட்டில்
எவனடா இருந்தான் சொல்?சொல்?
ஓங்கிடுப் புகழை, மாண்பை
உலகுவாழ் தமிழுக் காகத்
தாங்கினான் மார்பில் ஈட்டி
தன்மடிக் குழந்தை போல !
வாங்கினான் துயரத் துன்பம்
வையத்து மாந்தர்க் காக !.

அரசியல் அமைப்புச் சட்டம்
அனுதினம் காத்து நின்றோன்!
முரசொலி ஏட்டை நாளும்
முழக்கியே உழுதோன்! மன்றக்
கரவொலி எழுப்புக் காட்சிக்
கருத்தினால் நெஞ்சம் தைத்தோன் !
தமிழ்த்தகு வார்த்தை சிந்தித்
தவழவும் விட்டோன் வாழி!

**கவிஞர் தமிழ்தாசன்**
கழகத் தீர்மானக் குழுத் தலைவர்





தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க சார்பில் செயற்குழு கூட்டம் சங்கரன்கோவிலில் உள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் மாவட்ட அவைத்தலைவர் பத்மநாதன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மாநகர செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. பங்கேற்று உரையாற்றினார். உடன் தங்கவேலு, சீனிவாசன், பரமகுரு, சரவணன், முத்துச் செல்வி, ராஜதுரை, மனோகர் உள்பட பலர் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**எலமந்தா**
**ஆகஸ்ட் 7 (1995)**



தி.மு.கழக ஆதிதிராவிட நலப் பிரிவு மாநில செயலாளராகவும், தமிழக சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

எப்பொழுதும் ஓடியாடி ஏதாவது கழகப் பணி, பொதுப்பணி மற்றும் ஆதிஆந்திர மக்களுக்கான பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் நிகரற்று விளங்கியவர்.

"தொண்டனாக அலைந்தவர். தொழில் மேற்கொண்டு சிறந்தவர். என் விருப்பம் நிறைவேற்றிட எம்.எல்.சியாகப் பொறுப்பேற்று மேலவையில் கருத்து முழக்கம் செய்தவர். கழகத்தை உயிராக எண்ணியவர்!" என தலைவர் கலைஞர் அவர்களால் 'வீரவேங்கையொன்று வீழ்ந்ததே!' என இரங்கல் கடிதத்தில் தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**